**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 794/2024**

**Witness PW 2**

| பெயர் | திருமால் | தொழில் | |
|---|---|---|---|
| த/பெ | ராமசந்திரன் | வயது | |
| ஊர் | | தேதி | 14.08.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (14.08.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் சாட்சிய சம்மன் வாயிலாக ஆஜராகியுள்ளேன் . நான் சார்பதிவாளராக அனந்தபுரம் செஞ்சி தாலுக்காவில் பணி செய்து வருகிறேன் . 28.11.2006 ம் தேதி மண்ணாத ஆசாரி என்பவர் எங்களது அலுவலகத்தில ஒரு உயில் ஆவணத்தை பதிவு செய்துள்ளார் . அந்த ஆவண எண். 3 வது புத்தகம் 39/2006. மண்ணாத ஆசாரி என்பவர் சார் பதிவாளர் அலுவலகத்தில் வந்து தான் இடது கை பெருவிரல் ரேகை பதிவு செய்துள்ளார் . அந்த உயிலில் அவரது மகன்களான ராஜவேல் , சுந்தரராஜன், ஆகியோருக்கு எழுதி கொடுத்துள்ளார். பத்திர பதிவின் போது மண்ணாத ஆசாரி என்பவர் நல்ல நிலையில் தான் இருந்தார் அவரை விசாரணை செய்து தான் உயில் பதிவு செய்யப்பட்டது. பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் இன்னார் என்று நிருபித்தவர்கள் ஆகியோரை விசாரணை செய்து தான் ஆவணம் பதிவு செய்யப்பட்டது அந்த உயில் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது. **நீ.ம.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை இல்லை.**

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram